
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 16, 2024

செவ்வாய்க்கிழமை ஜூலை 16, 2024 | ஒளி: 10 கதிர்: 295 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## மின்கட்டணம் குறைப்பு

மின்கட்டணத்தை 22.5 சதவீதம் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது, செவ்வாய்க்கிழமை (16) முதல் அமுலாகுமென பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## வர்த்தகரை வாகனத்தில் கடத்தி கொளுத்தி கொலை

■ ஏ.எம்.கீத்

வாகனம் ஒன்றுடன் முற்றாக எரியூட்டப்பட்ட நிலையில், திருகோணமலை வனப்பகுதியில் இருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

மொறவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன் மதவாசி வனப்பகுதியில் திருகோணமலை-அனுராதபுர பிரதான வீதியில் இருந்து சுமார் ஒரு மணி நேரம் பயணிக்க கூடிய வனப்பகுதியில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், செல்வநாயகம் புரம் பகுதியை சேர்ந்த ஜெயரூபன் (வயது - 42) எனவும் அவரின் கேப் ரக வாகனம் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர், இவர், இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்ட தாக திருகோணமலை உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2






### அரசியலமைப்பில் இருக்கும்
# “13 அமுல்”



## மன்னாரில் சஜித் தெரிவிப்பு; தந்தையை புகழ்ந்தார்

■ எஸ்.ஆர்.லெம்பேட்

நாட்டின் அரசியலமைப்பில் இருக்கும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று மீண்டுமொரு தடவை, வடக்கில் வைத்து வலியுறுத்திக் கூறிய ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச, வடக்கில் கடல் வளங்கள் கொள்ளியிடப்படுவதைத் தடுக்கும் வகையில் நிரந்த தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்றும் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்துக்கு திங்கட்கிழமை(15) விஜயம் செய்த சஜித் பிரேமதாச, பல்வேறான நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தார். முன்னதாக அவர், மன்னாரில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ அலுவலகத்திற்குச் சென்று கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினார். அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர்,

தொடர்ச்சி P2



### பாராளுமன்ற அதிகாரத்தில் நீதித்துறை
# “தலையிடக் கூடாது”

## மஹியங்கனையில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

உறுமய’ வேலைத் திட்டம் 2002ஆம், 2003ஆம் ஆண்டுகளில் இந்த நாட்டில் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் எனவும் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் அதனை நிறுத்த வேண்டி ஏற்பட்டதாகவும் அன்று அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியிருந்தால், 20 வருடங்களுக்கு முன்னர் மக்களுக்கு நிரந்தர காணி உறுதி கிடைத்திருக்கும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார் நீதித்துறையின் அதிகாரம் பாராளுமன்றத்தில் உள்ளது என்பதை நினைவுபடுத்திய ஜனாதிபதி, பாராளுமன்றத்தின் நிறைவேற்று அதிகாரத்தில் நீதித்துறை தலையிடக் கூடாது என்ற நிலைப்பாட்டில் தான் எப்போதும் இருப்பதாகவும் தெரிவித்தார்.


தொடர்ச்சி P2

## ஜனாதிபதித் தேர்தலுக்கு எதிரான மனு தள்ளுபடி

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது சட்டத்திற்கு முரணானது என உத்தரவிடுமாறு கோரி, சட்டத்தரணி அருண லக்சிறி உனவத்துனவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு, மூவரடங்கிய நீதியரசர்கள் குழாமினால், திங்கட்கிழமை (15) தள்ளுபடி செய்யப்பட்டது.

அத்துடன் நீதிமன்ற கட்டணமாக 5 இலட்சம் ரூபாவை செலுத்துமாறும் மனுதாரருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதிமன்ற கட்டணத்தை ஜூலை 31ஆம் திகதிக்குள் செலுத்தவும் உத்தரவிடப்பட்டது.

தொடர்ச்சி P2



### ஜூலை 17 அதிகாரம்

ஜனாதிபதி தேர்தலை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் அதிகாரம், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஜூலை 17ஆம் திகதி கிடைக்கும்.



## 6 வருடம் அவகாசம் கேட்டார் மைத்திரி

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குமாறு உயர் நீதிமன்றினால் விதிக்கப்பட்ட 100 மில்லியன் ரூபாவில் 58 மில்லியன் ரூபாய் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் செலுத்தப்பட்டுள்ளது

மீதி பணத்தை செலுத்தி முடிக்க கால அவகாசம் வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர் நீதிமன்றத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



## 30,057 பேருக்கு டெங்கு

2024இல் இதுவரையான காலப்பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 30,000ஐ கடந்துள்ளதாகத் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய இதுவரையான காலப்பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 30,057 ஆகும்.

தொடர்ச்சி P2

### மூளைக் காய்ச்சலால்
## காலி கைதி மரணம்

கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த காலி சிறைக் கைதி ஒருவர் மூளைக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளதாக காலி சிறைச்சாலை அத்தியட்சகர் புலின கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

வந்துரம்ப மபொடுவான துன்வத்த பகுதியைச் சேர்ந்த புபுது ரங்கன சுமணசேகர என்ற கைதியே உயிரிழந்துள்ளார். ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் அவரை பத்தேகம நீதவான் நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்க கடந்த (22) உத்தரவிட்டது.



மூளைக் காய்ச்சல் தொடர்பில் கராப்பிட்டிய வைத்தியசாலையின் பிரதம சட்ட வைத்திய அதிகாரி ரொஹான் பி.ருவன்புரவிடம் கேட்ட போது, “மெனிங்கோகோகல் எனும் நுண்ணுயிரி மூளை காய்ச்சலை ஏற்படுத்துவதாகவும் அது தொற்றக்கூடியது” என்றார்.

### அத்தியட்சகர் விவகாரத்தில் குழப்பம்:
## வெளியேறினார் வைத்தியர் அர்ச்சுனா

■ பு.கஜிந்தன்

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு திங்கட்கிழமை (15) காலை சென்ற வைத்தியர் அர்ச்சுனா, வைத்தியசாலை வளாகத்தில் நிலவிய குழப்பமான சூழ்நிலையை அடுத்து அங்கிருந்து வெளியேறினார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு, பதில் வைத்திய அத்தியட்சகராக முன்னர் இருந்த இராமநாதன் அர்ச்சுனா, வருகைதந்தமையால் குழப்பமான நிலைமையொன்று அங்கு ஏற்பட்டது.

சாகவகச்சேரி வைத்தியசாலை அத்தியட்சகர் அலுவலகத்தில் வைத்திய அத்தியட்சகர் யார்? என்பது



தொடர்பில் இராமநாதன் அர்ச்சுனாவும் கோபால மூர்த்தி ரஜீவ்வும் நீண்ட விவாதத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் பொலிஸார் தலையிட்டு சுமூகமான நிலையை ஏற்படுத்த முயன்றனர்.

இதனையடுத்து சில மணிநேரம் வைத்தியசாலை அலுவலக அறையில் சில கடமைகளில் ஈடுபட்டுவிட்டு இராமநாதன் அர்ச்சுனா,

தொடர்ச்சி P2

## இம்ரான் கானின் கட்சிக்குத் தடை

சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் (பி.டி.ஐ.) கட்சியைத் தடை செய்ய ஷெபாஸ் ஷெரீப் தலைமையிலான அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

இந்த தகவலை அந்நாட்டு அமைச்சர் அட்டாவுல்லா தரார் உறுதிப்படுத்தியுள்ளார். இது அந்நாட்டு அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. ஏனென்றால், இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி பாகிஸ்தானின் மிகப்பெரிய எதிர்க்கட்சியாகும்.

பி.டி.ஐ. கட்சிக்குத் தடை விதிக்க இருப்பதற்கான காரணங்கள் குறித்து செய்தியாளர்கள் கேள்விக்குப் பதிலளித்த அட்டாவுல்லா தரார், “பி.டி.ஐ. கட்சி தேச விரோத செயல்களில் ஈடுபட்டுள்ளது. சட்டவிரோதமாக வெளிநாட்டு நிதிகளை



அக்கட்சி பெற்றுள்ளது. அதற்கு நம்பத் தகுந்த ஆதாரங்கள் உள்ளன. வெளிநாட்டு நிதியுதவி வழக்கு, மே 9 கலவரம் போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இம்ரான் கானின் கட்சியைத் தடை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வர்த்தகரை வாகனத்தில் கடத்தி கொளுத்தி கொலை

ஜெயரூபன் என்பவரை வீட்டிலிருந்து நபரொருவர் வெள்ளிக்கிழமை (12) அதிகாலை 2 மணியளவில் அழைத்துச் சென்றதாகவும் பின்னர் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பினால் அவர் தாக்கப்பட்டதாகவும் அதன்பின்னர் அவர், காணாமல் போனதாகவும் உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஜெயரூபனின் குடும்பத்தினரினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

பின்னர் குறித்த சம்பவம் தொடர்பில் 48, 51 மற்றும் 24 வயதுடைய மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். அந்த மூவரிடம் இருந்தும் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. அதனடிப்படையிலேயே எரியூட்டப்பட்ட இடத்தை மொறவெவ மற்றும் உப்புவெளி பொலிஸார் இணைந்து கண்டறிந்த குறித்த காட்டுப்பகுதியில் வாகனத்துடன் எரியூட்டப்பட்ட சடலத்தை மீட்டுள்ளனர்.

சம்பவ இடத்தை, திருகோணமலை மாவட்ட பதில் நீதவான் ஹனிபா அன்வர் பார்வையிட்டதுடன் பொலிஸ் பகுப்பாய்வு திணைக்களத்தின் பகுப்பாய்வுக்குப் பின்னர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய உடல் கூற்றுப் பரிசோதனைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சடலம் கொண்டு செல்லப்படவுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் (வயது - 26 மற்றும் வயது - 29) ஆகிய இரு சந்தேக நபர்கள் திருகோணமலையை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இவ்வாறு தப்பிச்சென்ற இரு சந்தேக நபர்களையும் உப்புவெளி பொலிஸார் தேடி வருவதுடன் குறிப்பிட்ட இரு சந்தேக நபர்களின் புகைப்படத்தினை வெளியிட்டு சந்தேக நபர்களைக் கண்டுபிடிக்கப் பொதுமக்களின் உதவியையும் நாடியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






## அரசியலமைப்பில் இருக்கும்
# “13 அமுல்”



## மன்னாரில் சஜித் தெரிவிப்பு: தந்தையை புகழ்ந்தார்

மன்னாரின் அபிவிருத்திக்காக, மீண்டும் ஒரு முறை வருகை தந்துள்ளேன். வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு வழங்குவதே எனது நோக்கமாக உள்ளது.

மன்னார் மாவட்ட மீனவர்களின் பிரச்சினையைத் தீர்த்து அவர்களுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்கவுள்ளேன். எமது கடல் வளங்கள் கொள்ளியிடப்படுகின்றதைத் தடுக்கும் வகையில் நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்கவுள்ளேன். வடக்கு மக்களின் அரசியல் உரிமை, சமூக உரிமை, பொருளாதார உரிமை, மனித உரிமைகள் உட்பட அனைத்து உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் செயல்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளேன்.

இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரு தாய் பிள்ளைகள் போல் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, இந்த நாட்டை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல உள்ளேன். வடக்கு ,கிழக்கில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அதிகமாக உள்ளன. அவர்களுக்கான சிறந்த திட்டங்கள் கொண்டு வர இருக்கிறேன்.

நுண்கடன் திட்டம் ஊடாக பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. மேலும் வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அவர்களை மையப்படுத்தி நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க எண்ணியுள்ளேன் என்றார்.

மாகாணசபை முறைமையை வலுப்படுத்தி அதை நிச்சயமாகப் பாதுகாக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு, மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய வேளைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்த அவர், மறைந்த எனது தந்தையார் ரணசிங்க பிரேமதாச, மாகாண சபையை இல்லாது ஒழிப்பதற்கு ஒருபோதும் முயற்சிக்கவில்லை. அதே போன்று மாகாண சபை கட்டமைப்பைப் பாதுகாக்கவும் முயற்சிகளை மேற்கொள்ளுவேன் எனவும் கூறியுள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலுக்கு எதிரான மனு தள்ளுபடி

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படாமல் ஜனாதிபதித் தேர்தலை நடத்தக் கூடாது என பிரகடனப்படுத்துமாறு கோரி சட்டத்தரணியினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவின் நிலைப்பாட்டைச் சவால் செய்து சட்டமா அதிபர், திங்கட்கிழமை (15) ஆரம்ப ஆட்சேபனைகளை முன்வைத்துள்ளார்.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை 2015 மே 15ஆம் திகதி சபாநாயகர் சான்றளித்துள்ளதாகவும், எனவே இந்த மனுவைத் தொடர்வதற்கு எவ்வித சட்ட அடிப்படையும் இல்லை எனவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

சட்டத்தரணி அருண லக்சிறி, தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர் அர்ஜுன ஒபேசேகர மற்றும் நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில், திங்கட்கிழமை (15) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## 6 வருடம் அவகாசம்...

அதன்படி, மீதி பணத்தைச் செலுத்தி முடிக்க 6 வருடகால அவகாசம் வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது சட்டத்தரணி மூலம் உயர் நீதிமன்றத்துக்கு திங்கட்கிழமை (15) கோரிக்கை விடுத்தார்.

## 30,057 பேருக்கு...

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அதேநேரம், 2024ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், மேல் மாகாணத்தில் 11,661 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நாட்டில் ஜூலை மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1,818 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

நாட்டின் பல பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வரும் நிலையில், டெங்கு நுளம்பு பெருகாத வகையில் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

## வெளியேறினார் வைத்தியர்...

வைத்தியசாலையில் இருந்து வெளியேறிச் சென்றார்.

இதேவேளை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் ரஜீவ் தொடர்ந்தும் கடமையில் ஈடுபட்டிருந்தார்.

தனக்கு உத்தியோகபூர்வமாக மத்திய சுகாதார அமைச்சில் இருந்து என்னை நீக்குவதற்கான கடிதம் வராத நிலையில் நானே சாவகச்சேரி வைத்தியசாலை பதில் அத்தியட்சகர் என தெரிவித்த இராமநாதன் அர்ச்சுனா, எனது விடுமுறை, ஞாயிற்றுக்கிழமை (14) நிறைவடைந்த நிலையில் கடமைக்கு மீண்டும் இன்று (திங்கட்கிழமை) வந்துள்ளேன் என்றார்.

சுகாதார அமைச்சர் உள்ளிட்ட உயர்மட்டக்குழு யாழ்ப்பாணத்துக்கு, செவ்வாய்க்கிழமை (16) வருகைதர உள்ளனர் என்றும், இந்த விவகாரம் தொடர்பில் முடிவு எட்டப்பட்டும் எனவும் இராமநாதன் அர்ச்சுனா நம்பிக்கை வெளியிட்டார்.

வெளியேறிச் சென்ற வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவை குழுமிய பொதுமக்கள் அவரை தோளில் தாங்கிச் சென்றனர்.

இதேவேளை சாவகச்சேரி வைத்தியசாலைப் பகுதியில் காலை முதல் பொலிஸார் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுக் காணப்பட்டதுடன் வைத்தியசாலை செயற்பாடுகள் சுமூகமாக நடைபெற்றது.

இதேவேளை, வைத்தியசாலை முன்பாக குழப்பத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.



# “தலையிடக் கூடாது”

மஹியங்கனை பொது விளையாட்டரங்கில் ஞாயிற்றுக்கிழமை (14) இடம்பெற்ற உறுமய நிரந்தர காணி உறுதி வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

20 இலட்சம் நிரந்தர காணி உறுதி வழங்கும் ‘உறுமய’ தேசிய திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் தகுதி பெற்ற 65,393 பேரில் 662 பேருக்கு நிரந்தர காணி உறுதிகள் வழங்கப்பட்டன. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அடையாளமாக சிலருக்கு காணி உறுதிகளை வழங்கிவைத்தார்.

இத்துடன் இணைந்ததாக பதுளை மாவட்டத்திலுள்ள நான்கு பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்களையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கி வைத்தார். அத்துடன், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மஹியங்கனை பொது விளையாட்டரங்கின் பிரதான கேட்போர் கூடத்தையும் திறந்து வைத்தார்.

உறுமய நிரந்தர காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

“காணி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டம் இந்த நாட்டில் 2002 மற்றும் 2003ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும். ஆனால், நீதிமன்றம் அதைத் தடுத்து நிறுத்தியது. இந்த நாட்டின் காணி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நான் செயற்பட்டேன்.

நாங்கள் மகாவலி திட்டத்தை ஆரம்பிக்கும் போது இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். ஆனால், 10-15 ஆண்டுகளுக்குப் பிறகு அது தேவைப்படவில்லை. அந்த மக்கள் நிலங்களைப் பாதுகாத்தனர். அந்த மக்கள் நிலத்தை விற்க மாட்டார்கள் என்று நம்பினேன். ஆனால், அப்போது மக்கள் இந்த நில உரிமையை எதிர்பார்த்தனர். இதன்படி, காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இந்த காணிகளை வழங்குவதற்கு புதிய சட்டம் தேவைப்பட்டது. அந்த சட்ட வரைவை நான் முன்வைத்தேன். ஆனால், அத்தகைய சட்டத்தை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்று உயர் நீதிமன்றம் அறிவித்தது.

அந்த சமயத்தில் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வாய்ப்பு கிடைத்திருந்தால் 20 வருடங்களுக்கு முன்னரே மக்களின் இலவச காணி உரிமையை உறுதிப்படுத்தும் வாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால், அதன் பிறகு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிரந்தரமாகக் காணிகள் வழங்கப்பட்டன. காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணியை ஷங்கிரிலா ஹோட்டலுக்கு வழங்க முடியுமானால் ஜனாதிபதி என்ற முறையில் 20 இலட்சம் மக்களுக்குக் காணி உரிமையை ஏன் வழங்க முடியாது என நான் கேட்க விரும்புகின்றேன்.

இதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம் என்றார்கள். ஆனால் அதிகார வரம்பு நீதிமன்றத்திற்கு அன்றி பாராளுமன்றத்திற்கே உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தின் நிறைவேற்று அதிகாரத்தில் நீதித்துறை தலையிடக் கூடாது என்ற நிலைப்பாட்டில் நான் எப்போதும் இருக்கிறேன்.

20 ஆண்டுகளுக்கு முன்னர் செயல்படுத்தப்படக்கூடிய திட்டத்தைச் செயல்படுத்த முடியாமல் போனது வருத்தம் அளிக்கிறது. இப்போது இந்த நில உரிமைகளை மக்களுக்கு வழங்கி வருகிறோம்.

இவை உங்களுக்குச் சொந்தமான நிலங்கள். அந்த உரிமையை உறுதி செய்யும் வகையில் இன்று இந்த நிரந்தர காணிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதை உங்கள் முன்னேற்றத்தின் தொடக்கமாக மாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தேவையான சூழலை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என ஜனாதிபதி தெரிவித்தார்.

# இம்ரான் கானின் கட்சிக்குத் தடை



இனி பாகிஸ்தானும், பி.டி.ஐ. கட்சியும் இணைந்திருக்க முடியாது. உச்ச நீதிமன்றத்தில் பி.டி.ஐ. கட்சிக்குத் தடை விதிப்பது தொடர்பாக மனுத் தாக்கல் செய்யவுள்ளோம். மேலும், இம்ரான் கான் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஆரிப் ஆல்வி மீது தேசத்துரோக வழக்குப் பதிவு செய்யவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது.” என்றார்.



# தீகவாபி தூபியில் நினைவுச் சின்னங்கள்

வரலாற்றுச் சிறப்புமிக்க தீகவாபி தூபிக்குள் புனித தாது, பொக்கிஷங்கள் என்பவற்றை வைக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பங்களிப்புடன் ஞாயிற்றுக்கிழமை (14) காலை நடைபெற்றது.

இலங்கையின் நான்காவது பெரிய தூபிகளில் ஒன்றான தீகவாபியை புனரமைக்கும் பணிகள் 2020ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்திற்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் தீகவாபி தூபியில் புனித தாது வைக்கப்பட்டதோடு அந்த சமயத்தில் விமானப் படையினர் மலர் தூவி மலர் அஞ்சலி செலுத்தினர்.

புனித தாது மற்றும் ஏனைய தாதுக்கள் வைக்கப்பட்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தாது மண்டபம் மற்றும் அன்னதான மண்டபம் என்பவற்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திறந்து வைத்தார்.











# “எங்களிடம் வேட்பாளர் இல்லை”

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு வற்புறுத்தவுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா- உடுகம்பொல பிரதேசத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகள் மத்தியில் சனிக்கிழமை(13) உரையாற்றும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை முன்வைப்பது குறித்து தமது கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை. அத்துடன், ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்குப் பொருத்தமான நபர் தமது கட்சியில் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் அவருக்கு நன்றியுள்ள ஒரு நபராக அவரது



வெற்றிக்காக தன்னை அர்ப்பணிப்பதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை(21) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் கடவத்த நகரில் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

அரசின் திட்டத்தால் கவரப்பட்டவர்கள் ஏராளமானோர் உள்ளனர்.

நாம் அவர்களிடம் செல்ல வேண்டும். இல்லையெனில், மக்கள் எங்களிடம் வருவார்கள் என்று காத்திருந்து இந்த போட்டியில் விளையாட முடியாது. எனவே, ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் கிராமத்திற்கு செல்ல வேண்டும்.

இம்மாதம் 17ஆம் திகதிக்கு பிறகு தேர்தல் திகதியை முடிவு செய்யும் முழு அதிகாரமும் தேர்தல் ஆணையாளருக்கு உள்ளது. ஜனாதிபதி தேர்தல் ஒக்டோபர் 15ஆம் திகதி நடத்தப்பட வேண்டும்.

எங்கள் தரப்பில் இருந்து யார் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது என்பதில் உங்களுக்கு சிக்கல் இருக்கும். நான் இப்போது இருக்கும் சூழ்நிலையும் உங்களுக்கு தெரியும். நாங்கள் நன்றியுள்ள மக்கள். நாங்கள் மொட்டுக் கட்சியை உருவாக்கி மிகக் குறுகிய காலத்தில் ஆட்சியைப் பிடித்தோம்.பிரதமர் எங்கள் கட்சியில் இருந்து நியமிக்கப்பட்டார், ஆனால், எங்கள் தலைவர்கள் 2022 ஆகும் போது அதிகாரத்தை கைவிட்டு விட்டு எங்கள் தலைவர்கள் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது என்றார்.

# பேருந்து விபத்தில் 10க்கும் மேற்பட்டோர் காயம்

தலங்கம - கொஸ்வத்த பிரதேசத்தில் இரண்டு தனியார் பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் விபத்தை ஏற்படுத்திய 177 இலக்க பேருந்தின் சாரதியும் அடங்குவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இலக்கம் 190 மீகொட - புறக்கோட்டை மற்றும் இலக்கம் 177 கடுவெல - கொள்ளுப்பிட்டி பயணிக்கும் பேருந்துகளே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.




மீகொடயிலிருந்து புறக்கோட்டை நோக்கிச் சென்ற பேருந்து பத்தரமுல்லை- தலாஹேனையை கடந்து பயணிக்கும் போது, கடுவெலயிலிருந்து கொள்ளுப்பிட்டி நோக்கிச் சென்ற பேருந்து பின்னால் வந்து மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கனடாவில் வேலை; மோசடி செய்தவர் கைது

கனடாவில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பணத்தை மோசடி செய்த இருவரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர். பொரளை பிரதேசத்தில் இயங்கும் நிறுவனமொன்று கனடாவில் நிதித்துறையில் தொழில் வழங்குவதாகக் கூறி 10 இலட்சம் ரூபாயைப் பெற்றுக்கொண்ட போதிலும் வாக்குறுதியளித்தபடி வேலை வழங்கவில்லை என நபர் ஒருவர் பணியகத்தில் செய்த முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்பேரில், சம்பந்தப்பட்ட இடத்தில் விசாரணை அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர்.

இதன்போது, குறித்த நிறுவனம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி நடத்தப்பட்ட சட்டவிரோத வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் என தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, குறித்த நிறுவன உரிமையாளர் உட்பட மேலும் ஒருவரை புலனாய்வு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது, 10 இலட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# புதிய தொழில்நுட்பங்களுடன் அறுவடை விழா

வி.ரி.சகாதேவராஜா

மட்டக்களப்பு- கொக்கட்டிச்சோலை விவசாய விரிவாக்கல் நிலையத்திற்குட்பட்ட மாவடிமுன்மாரி கிராமத்தில் புதிய தொழில்நுட்பங்களுடன் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கையின் அறுவடை விழா சனிக்கிழமை (15) இடம்பெற்றது.

இதன்போது பரசூட் முறை, இயந்திர நாற்று நடுகை மற்றும் வீசி விதைத்தல் ஆகிய மூன்று முறைகளிலும் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கை அறுவடையின் பின் பயிர்வெட்டு அளவீடு செய்யப்பட்டது.

வீசிவிதைத்தலை விடவும் ஏனைய இரு முறைகளிலும் அதிக விளைச்சல் கிடைத்ததோடு, உற்பத்தி செலவும் குறைவாக இருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம்.பரமேஸ்வரனின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் இவ்வாறான முன்மாதிரி துண்டச்செய்கைகள் செய்கை முன்னெடுக்கப்பட்டது.

மாவடிமுன்மாரி விவசாய போதனாசிரியர் பிரிவிற்கு பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தர் துஷாந் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர்




நித்தியா நவரூபன் பாடவிதான உத்தியோகத்தர்களான லாவண்யா செந்தீபன், லக்ஷ்மன், இளமாறன், தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஒலி அமைப்பு சாதனம் அன்பளிப்பு

ஒரு தசாப்தத்தை கடந்து பயணிக்கும் நோர்ட்டன் வாசகர் வட்டத்தின் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் கெயார் லகா பௌண்டேசன் அனுசரணையில் ஒலி அமைப்பு சாதனம் ஞாயிற்றுக்கிழமை (14) அன்பளிப்பு செய்யப்பட்டது.

இதன்போது, கல்வி, கலை, கலாசார, ஊக்குவிப்பு விடயங்களை ஒரு தசாப்த்த காலத்திற்கு மேலாகச் செய்து வரும் நோர்ட்டன் வாசகர் வட்டத்தின் செயற்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில், ஒலி அமைப்பு சாதனத்தை தந்துதவிய கெயார் லங்கா அறக்கட்டளையின் பணிப்பாளர் அர்ஜூன் ஜெயராஜ்க்கு வாசகர் வட்டத்தின் சார்பாக நினைவுப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டதுடன், வாசகர் வட்டத்தின் வெளியீடான மலையக ஆளுமை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தமிழ் பிரிவு ஆணையாளர் நாயகம் அமரர் லெனின் மதிவானம் அவர்களின் நினைவுத் தொகுப்பான “இளமை புலமை இனிமை” தொகுப்பும் வழங்கி வைக்கப்பட்டது.

வாசகர் வட்டத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான எம்.ராம் தலைமையில், காசல்றி சமர்ஹவுஸ் ஹோட்டல் மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கெயார் லங்கா அறக்கட்டளையின் பணிப்பாளர் அர்ஜூன் ஜெயராஜ், வாசகர் வட்டத்தின் செயலாளரும் அதிபருமாகிய சுகேஸ்வரன், பொருளாளர் தமிழ்செல்வன், ஓட்டரி த.வி. அதிபர் மதியழகன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் காமராஜ், மற்றும் வாசகர் வட்டத்தின் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.







# தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்களும்; அமைச்சரவை வரைவும்

ஜனாதிபதியின் பதவிக் காலத்தைக் கேள்விக்கு உட்படுத்தித் தாக்கல் செய்யப்பட்ட மனுவும், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது சட்டத்துக்கு முரணானது என உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவும் உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஆறு வருடங்களாக அறிவித்து அதுவரை ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருக்குமாறு கோரி மொரட்டுவையைச் சேர்ந்தவர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு, பிரதமர் நீதியசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய நீதியரசர்கள் குழுவால் ஜூலை 8ஆம் திகதி தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது சட்டத்துக்கு முரணானது என உத்தரவிடுமாறு கோரி, சட்டத்தரணி அருண லக்சிறி தாக்கல் செய்திருந்த மனு, பிரதமர் நீதியசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம், ஜூலை 15ஆம் திகதி தள்ளுபடி செய்தது.

ஜனாதிபதித் தேர்தலை உத்தியோகப்பூர்வமாக அறிவிப்பதற்கான அதிகாரம், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு, ஜூலை 17ஆம் திகதி கிடைக்கும். இந்நிலையிலேயே இவ்விரு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. ஜனாதிபதித் தேர்தலைத் தள்ளிவைக்கும் நோக்கி, அரசாங்கத்தின் சூழ்ச்சியுடனேயே இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

எனினும், முதலாவது மனுவுக்கும் ஜனாதிபதிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. மனுவைச் சமர்ப்பிக்கும் முன்னர் ஜனாதிபதி அல்லது அவரது சட்டத்தரணிகளுடன் மனுதாரர் கலந்துரையாடவில்லை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்திருந்தது. இரண்டாவது மனு தொடர்பில் எவ்விதமான விளக்கங்களையும் அப்பிரிவு விடுக்கவில்லை.

முதலாவது மனு நிராகரிக்கப்பட்ட மறுநாள் அதாவது, ஜூலை 9 ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் கூடிய அமைச்சரவையில், ஜனாதிபதி, பாராளுமன்றம் ஆகியவற்றின் பதவிக்காலம் தொடர்பான அரசியலமைப்பின் ஒரு பிரிவைத் திருத்துவதற்கான வரைவு யோசனைக்கு அங்கிகாரம் அளிக்கப்பட்டது.

அந்த வரைவு, ஜூலை 15ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டால், ஜூலை 23ஆம் திகதி முதல் வாசிப்புக்காகப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இந்த சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும்.

உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் வரை இந்த சட்டமூலம் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது.

இந்த சட்டமூலம் தொடர்பான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதிக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்படும் போது, ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவிப்புக்களைத் தேர்தல்கள் ஆணைக்குழு நிறைவு செய்திருக்கும்.ஜனநாயக நாடொன்றில் மக்களின் நாடியைப் பிடித்துப்பார்க்க வேண்டுமாயின், தேர்தல்களைக் கட்டாயமாக நடத்தவேண்டும். தங்களுக்கு சாதகமான காலத்தை அவதானித்தே, தேர்தலுக்கான அறிவிப்பை அரசாங்கம் அதிரடியாக விடுக்கும்.

எனினும், ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்களை நடத்துவதற்கு நாடிபிடித்து பார்க்கவேண்டிய அவசியமில்லை. அந்தந்த காலங்களில் அவ்விரண்டு தேர்தல்களையும் நடத்தியே ஆகவேண்டும். அது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் சட்டமாகும்.

இந்நிலையில், அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கிகாரம் பெற்றிருக்கும் வரைவு காலத்தை வீணடிக்கும் ஒரு செயற்பாடாகும் என்பதே எமது அவதானிப்பாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார். எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், “என்ன எங்கள் ஊரில் சண்டையா” என்று கேட்டுவிட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைச் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, “யாரடா இதைச் சொன்னது” என கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள்.

தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது. கலவரங்கள் எல்லாமே வதந்திகளால் தான் உருவாகின்றன.
யுத்தங்கள் கூட!.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

### தமக்குள் பேசி கோரிக்கைகளை

# முன்வைக்காத முஸ்லிம் தரப்பு

– மொஹமட் பாதுஷா

தேர்தலை நடத்த முனைவது போல் வெளியில் காட்டிக்கொண்டு மறைமுகமாக அதனை தாமதப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவதையும் காண்கின்றோம். ஆனால், உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள ஒரு சூழலில், ஜனாதிபதித் தேர்தலையும், பாராளுமன்றப் பொதுத் தேர்தலையும் எவ்வளவு காலத்திற்கு இழுத்தடிக்க முடியும்?

ஆகவே, இன்னும் சில மாதங்களுக்குள் ஏதாவது ஒரு தேர்தலுக்கு நாடு சென்றேயாக வேண்டிய நிலை இருக்கின்றது.

இல்லாவிட்டால், இப்போது நாட்டில் முடுக்கிவிடப்பட்டுள்ள குழப்பங்கள் இன்னும் அதிகரிக்கும் என்பதே நமது அனுமானமும் அனுபவமும் ஆகும்.

இந்தக் காலப் பகுதியை தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு முஸ்லிம் கட்சிகளும், தலைவர்களும். எம்.பிக்களும் தமக்கிடையே உரையாடல்களை நடத்தி சமூகத்தின் அபிலாஷைகள் குறித்த ஒரு கட்டமைக்கப்பட்ட நிலைப்பாட்டுக்கு வரமுடியும்.

சமூகம் சார்ந்த கோரிக்கைகளைக் கூட்டாக, அரசாங்கத்திடம் முன்வைத்துப் பேசமுடியும். அவற்றுள் ஒரு சிலவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள இருக்கின்ற காலத்தை உபயோகப்படுத்த முடியும்.

அப்படிச் செய்தால், முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது கடைசிக் காலத்திலாவது சமூகத்திற்கு ஏதாவது நல்லது செய்ததாகத் திருப்திப்பட்டுக் கொள்ளலாம்.

ஒருவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவோ அல்லது அரசாங்கமோ முஸ்லிம் அரசியல் தரப்பின் கோரிக்கைகளுக்குக் கொஞ்சம் கூட செவிசாய்க்கவில்லை என்றால், நாம் மாற்றுத் தெரிவுகளை நோக்கி நகர முடியும். ஏனைய பெருந்தேசியக் கட்சிகள், வேட்பாளர்களிடம் முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் பற்றிப் பேசி, ஆதரவளிக்கும் முடிவை எடுக்கலாம்.

ஆனால், அப்படி எதுவும் நடந்த மாதிரி தெரியவில்லை. இனிமேல் நடக்கும் என்ற அறிகுறிகளும் தென்படவில்லை என்பதுதான் கவலைக்குரியது.

கடந்த காலங்களைப் போல, எந்தப் பேச்சுவார்த்தைகளும், எந்த கோரிக்கைகளும், எந்த உடன்பாடுகளும், எந்தவிதமான ஒப்பந்தங்களும் இன்றி இம்முறையும் கூட்டுச் சேர்வதற்கே முஸ்லிம் அரசியல் அணிகள் பிரயாசைப்படுவதாக தெரிகின்றது.

ஒரு சமூகம் சார்ந்த அரசியல் கட்சி தலைவர்கள். முஸ்லிம் சமூகத்தின் காவலர்கள் எனச் சொல்லிக் கொள்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்தவித பேச்சுக்களும் இன்றி,நிபந்தனைகளும் இன்றி எந்த பெருந் தேசிய கட்சிக்கும் வேட்பாளருக்கும் இனிமேலும் ஆதரவளிக்க முடியாது.

முஸ்லிம் சமூகம் நன்றிக் கடனாகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ கண்ணை மூடிக்கொண்டு எந்தக் கட்சியையும், ஜனாதிபதி வேட்பாளரையும் ஆதரிக்க வேண்டியதும் இல்லை, நிராகரிக்க வேண்டியதும் இல்லை. ஆனால், அப்படித்தான் நடந்து கொண்டிருக்கின்றது.

இப்போது பெரும்பாலும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான நிகழ்தகவுகளே அதிகமுள்ளன. எனவே, முஸ்லிம் கட்சிகள், அரசியல் அணிகள் ஒரு கூட்டமைப்பாக வரவேண்டியதில்லை. அது நடைமுறைச் சாத்திமும் இல்லை என்பது கடந்த காலத்தில் நிரூபணமாகி விட்டது.

ஆயினும், பிரதான முஸ்லிம் கட்சிகளாவது ஒரே மேசையில் அமர்ந்து குறைந்த பட்சம் தமது சமூகத்தின் பிரச்சினைகள், கோரிக்கைகளைப் பேசி,அவற்றை உத்தேச வேட்பாளரான ஜனாதிபதியிடம் முன்வைத்தால், அது ஒரு பலம் பொருந்திய கோரிக்கையாக அமையும். அவற்றுள் சில பிரச்சினைகளையாவது அரசாங்கம் தீர்த்து வைக்க முயற்சிக்கலாம்.

ஜனாதிபதியோ அல்லது வேறு ஒரு வேட்பாளரிடம் கோரிக்கையை முன்வைத்து, அதற்கு அவர் இணங்காத விடத்து, நாங்கள் மாற்றுத் தெரிவுகளை எடுப்போம் என்ற செய்தியை முன்கூட்டியே சொல்ல முடியும். அதைவிடுத்து, அவசரப்பட்டு, எந்த பேச்சுமின்றி பின்கதவால் உறவுகொண்டு ஆதரவளிப்பதும், எதிர்ப்பதும் மிக மோசமான அரசியலாகும்.

அதுதான் இந்த முறையும் முஸ்லிம் அரசியல் பரப்பில் நடந்து கொண்டிருக்கின்றது. கட்சித் தலைவர்களுக்குத் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் உள்ளன. அத்துடன், பல எம்.பிமாருக்கு பெருந்தொகை நிதி வழங்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. வீதிகள், கட்டிட நிர்மாணங்கள், உதவித் தொகைகளாக இவை பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இன்னுமொரு கூட்டம் பதவிகளுக்குப் பின்னால் அலைகின்றது.

அதாவது, சமூகத்தின் பிரச்சினைகளை முன்வைத்துப் பேசி, ஒரு நிபந்தனையின் அடிப்படையில் ஆதரவளிக்க வேண்டும் என்று சமூகம் கோரி நிற்கின்ற சூழலில், முஸ்லிம் தரப்புக்கள் தமக்கிடையே ஒன்றுகூடிப் பேசவும் இல்லை. பெருந் தேசியக் கட்சிகள், உத்தேச வேட்பாளர்களும் உருப்படியான கோரிக்கைகளை முன்வைக்கவும் இல்லை.

மாறாக, நிதி ஒதுக்கீடுகளுக்காகவும் எதிர்கால பதவிகளை இலக்கு வைத்தும் தீர்மானங்கள் எடுக்கப்படுவதையும், இந்தப் புள்ளியில் கட்சித் தீர்மானமும் அக்கட்சியின் எம்.பியின் தீர்மானமும் வேறுபடலாம் என்பதையும் நாம் அறியாதவர்களல்லர். அதுமட்டுமன்றி, ‘உதவி வழங்கிய’ தரப்பைத்தான் இவர்கள் ஆதரிப்பார்கள் என்பதும் நிச்சயமில்லை.

> **ஒருவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவோ அல்லது அரசாங்கமோ முஸ்லிம் அரசியல் தரப்பின் கோரிக்கைகளுக்குக் கொஞ்சம் கூட செவிசாய்க்கவில்லை என்றால், நாம் மாற்றுத் தெரிவுகளை நோக்கி நகர முடியும். ஏனைய பெருந்தேசியக் கட்சிகள், வேட்பாளர்களிடம் முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் பற்றிப் பேசி, ஆதரவளிக்கும் முடிவை எடுக்கலாம்**

அந்த வரிசையில், தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் முன்னமே முஸ்லிம் கட்சிகளும் தலைவர்களும் எம்.பிக்களும் அவசரப்படுவதைக் காண்கின்றோம். யார் நிச்சயிக்கப்பட்ட வேட்பாளர்,அவரது கொள்கை, தேர்தல் விஞ்ஞாபனம் என்ன? என்பதை இவர்கள் அறியமாட்டார்கள்.

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள், அபிலாஷைகள், நிலைப்பாடுகள் குறித்து முஸ்லிம் அரசியல் அணிகள் கூடிப் பேசி ஒரு முடிவை எடுக்கவில்லை. அதுமட்டுமன்றி, ஒவ்வொரு முஸ்லிம் கட்சியும் அணியும் தமது சொந்தக் கட்சிக்குள்ளேயே யாரை ஆதரிப்பது என்பது குறித்த ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வர முடியாத கையறு நிலை காணப்படுகின்றது.

எது எவ்வாறிருப்பினும், பிரதான முஸ்லிம் கட்சிகள் எந்தவித மக்கள் சார்பு உடன்பாடும் இன்றி யாராவது ஒரு வேட்பாளரை ஆதரிப்பதற்கு அவசரக் குடுக்கைத்தனமாக நகர்வுகளைச் செய்வதைக் காணமுடிகின்றது. இது தவிர்க்கப்பட வேண்டும்.

உத்தேச வேட்பாளர்களுடன் பேசி முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளாமலோ அல்லது ‘தான் பதவிக்கு வந்தால் இந்த இந்த பிரச்சினைகளைத் தீர்த்து வைப்போம்’ என்ற உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்ளாமலும் தன்னார்வமாக ஓடிப்போய் ஆதரவளிப்பது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்?

அதேபோல், தேர்தலும், அதற்கான வேட்பாளர்களும் இன்னும் உத்தியோகபூர்மாக அறிவிக்கப்படாத நிலையில், தம்மை ஒரு குறிப்பிட்ட கட்சியின் அமைப்பாளராக, செயற்பாட்டாளராக, ஆதரவாளராக, முட்டுக் கொடுப்பவராக முஸ்லிம் தலைவர்களும் எம்.பிக்களும் காண்பிக்க முனைவதால் சமூகத்திற்குக் கிடைக்கப் போகின்ற நன்மைகள் என்னவென்று அவர்கள் சொல்வார்களா?

தமிழ்ச் சமூகத்தில் முஸ்லிம் சமூகத்தை விட அதிக பிளவுகள், பாகுபாடுகள் உள்ளன என்பதே நிதர்சனமாகும்.

ஆனால் அதனையெல்லாம் ஒருபுறம் வைத்துவிட்டு சமூகத்தின் பிரச்சினைக்காக ஒரே மேசையில் அமர்ந்து அவர்கள் பேசுகின்றார்கள்.

இந்த நிலைமை முஸ்லிம் சமூகத்திற்குள் உருவாக வேண்டும். முஸ்லிம் அரசியல் தரப்புகளும் அவசிமேற்பட்டால் சிவில் தரப்புக்களும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும். இந்தப் ‘பூனைக்கு யாராவது மணிகட்ட’ முன்வருவதும் காலத்தின் அவசியமாகும்.

அதைவிடுத்து, ‘இவர் வெல்வார்’ என்ற அனுமானத்தின் அடிப்படையிலோ, கொந்தராத்துக்களை மேற்கொள்வதற்காக எம்.பிக்களுக்கு தரப்படும் பணத்திற்காகவோ, அவர்களுக்குக் கொடுக்கப்படும் வெகுமதிகளுக்காகவோ அல்லது எதிர்காலத்தில் அமைச்சுப் பதவி கிடைக்கும் என்ற கனவுக்காகவோ, நிபந்தனையற்ற ஆதரவளிப்பதன் மூலம் முஸ்லிம் சமூகத்தை அடகு வைக்கக் கூடாது.

அப்படி ஒரு கேடுகெட்ட அரசியல் செய்வதை விட, தேர்தலில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பை நேரடியாக மக்களிடம் கொடுத்துவிட்டு, முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது பிழைப்பைப் பார்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்றால் அதனை வரவேற்கலாம்.

## கடிதங்கள்

### சாலை ஆற்றினை ஆழப்படுத்துங்கள்



முல்லைத்தீவின் நந்திக் கடல், சாலை ஆறு என்பவற்றினை ஆழப்படுத்துமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2010ஆம் ஆண்டில் இருந்து நந்திக் கடலில் உள்ள சேறு அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

2009ஆம் ஆண்டு போர் நடைபெற்ற போது அமைக்கப்பட்ட மண் அணைகள் கரைந்து நந்திக் கடல், சாலை ஆறுகளில் நிறைந்திருப்பதன் காரணமாக நீர் மட்டம் குறைவடைந்திருப்பதன் காரணமாக ஆறுகளில் இறால் உட்பட கடல் உணவுகளின் பெருக்கம் குறைந்து காணப்படுகின்றது.

இதன் காரணமாக நந்திக் கடல் மற்றும் சாலை ஆற்றினை நம்பியுள்ள கடற்றொழிலாளர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

- நடராசா கிருஸ்ணகுமார்

## “சர்வதேசக் கடப்பாட்டில்

# கரிசனை காட்டவில்லை”

### இந்தியாவில் ரவூப் ஹக்கீம் பேட்டி



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டிலேயே நாங்கள் உள்ளோம் என தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என திருச்சி விமான நிலையத்தில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (14) தெரிவித்தார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள உயர் கல்விக் கல்லூரியொன்றின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பிலிருந்து விமானம் மூலமாக ஞாயிறு காலை 11.30 மணியளவில் அவர் திருச்சி விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவரை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சார்பில் மாநில எம்.எஸ்.எப். தலைவர் அன்சார் அலி மற்றும் முக்கியஸ்தர்கள் வரவேற்றனர். திருச்சி விமான நிலையத்தில் ரவூப் ஹக்கீம் செய்தியாளர்களிடம் கூறுகையில், பாபநாசம் ஆர்.டி.பி. தாவூத் பாட்ஷா கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் அதிதியாகக் கலந்து கொள்வதற்காக அழைப்பையேற்று நான் தமிழ்நாடு வந்திருக்கிறேன்.

அண்மையில் நடைபெற்று முடிந்துள்ள இந்தியப் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில துணைத்தலைவர் நவாஸ் கனி உட்பட சிலரை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவிக்க வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் பயணத் திட்டத்தில் உள்ளடக்கியே மரியாதை நிமித்தமான பயணமாக நான் இதனை அமைத்துக் கொண்டுள்ளேன்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே கப்பல் போக்குவரத்து தொடங்க ஏதும் பிரச்சினை இல்லை.மத்திய அரசும் தமிழக அரசும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன, காலநிலை காரணமாகத் தனியார் கப்பல் நிறுவனத்தின் தரப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மீண்டும் அதனைத் தொடங்குவதற்கான ஆர்வம் காட்டப்படுகின்றது. அதேநேரம் கப்பலின் தொழில்நுட்ப காரணம் தான் கப்பல் சேவை தொடங்குவதற்குத் தாமதம் எனவும் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - இலங்கை இடையே தரைவழியான சேவை தொடங்குவதற்கு முன்னர் ராமர் பாலத்தில் வழியே அந்த சேவை தொடங்க பல குறுக்கீடுகள் உள்ளதுடன், இந்தியா- இலங்கை இருதரப்பினருக்கும் இடையே ஆர்வம் இருந்தாலும் இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து சற்று மீண்டுவரும் இச்சமயத்தில் இலங்கை அரசு இதில் தாமதம் காட்டிவருகிறது. ஆனால் இந்திய அரசு இதில் முனைப்புக் காட்டிவருகிறது.

மேலும் குழாய் வழியே இலங்கைக்கு எண்ணெய் கொண்டுசெல்வதற்கும், காற்றாலை மூலம் மின்சார உற்பத்தி தொடங்குவதற்கு முதலீடு செய்யப்பட்டு ஒப்பந்தங்களும் முடிவாகியுள்ளன.

இலங்கையில் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டில் நாங்கள் உள்ளோம், ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு விரைவில் அறிவிக்கப்பட்டதும் எங்களது முடிவு என்ன என்பதை நாம் ஒன்றாகக் கூடி கலந்தாலோசித்து அறிவிப்போம்.

தமிழக மீனவர்கள் மற்றும் இலங்கை மீனவர்கள் இடையிலான பிரச்சினை என்பது தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு மீன்பிடிப்பது தொடர்பிலும் ஏற்பட்டுள்ளது, இதனால் மீன்களின் இனப்பெருக்கம் குறைகிறது மேலும் கடலுக்கு அடியில் உள்ள வளங்களைச் சுரண்டி எடுத்துக்கொண்டு செல்வதால் தான் தமிழக மீனவர்கள் மற்றும் இலங்கை மீனவர்கள் இருதரப்பினரிடையேயான பிரச்சினைக்கு, சுமுகமான பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் இலங்கை மற்றும் இந்திய மீனவர்கள் இடையே பேசி தீர்த்துக் கொள்ள வேண்டிய விஷயம் இது, அதேபோன்று கச்சத்தீவு விவகாரத்திலும் ஒரு கருத்து ஒருமைப்பாடு ஏற்பட வேண்டும் என்பதுவே எங்களது நிலைப்பாடு.

தமிழக மக்களின் குரலாக எதிர்க்கட்சிகள் நாங்கள் இருக்கிறோம், ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் நேரடி வாழ்வாதாரத்திற்கு ஆட்சி அதிகாரத்தில் இல்லாத பட்சத்திலும் மக்கள் நன்மைக்காகப் பல விடயங்களை செய்கிறோம், மேலும் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தமிழக மக்களுக்காக நாங்கள் ஆட்சிக்கு வரும்போது பல செயல்திட்டங்களைச் செய்யக் காத்திருக்கின்றோம். மேலும் ஒரிலட்சம் வீட்டுத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு இந்திய அரசு மிகப்பெரிய பங்களிப்பைச் செய்துள்ளது.

போருக்குப் பின்னரான இலங்கையில் வளர்ச்சி ஏற்பட்டாலும் கடன் சுமை காரணமாக உலக நாடுகளுக்கு அதனைத் திருப்பி செலுத்த முடியாத நிலையிருக்கத்தக்கதாக, இந்திய மத்திய அரசு 4,000 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் இலங்கைக்கு பெட்ரோல் டீசல் மற்றும் காஸ் போன்ற பல்வேறு வகையான உதவிகளை அளித்ததன் பேரில், தற்போது கடன்சுமையிலிருந்து ஓரளவு மீண்டு வருகின்றோம். அதற்கு இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதனால் இலங்கை மீது சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் ஏற்பட்டதன் காரணமாக, புதிய சட்டமூலங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். காணாமல் போனவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பது உட்பட பாதிப்புகளுக்கானவர்கள் விஷயத்தில் பல பரிகாரங்களைச் செய்வதற்காக ஒரு சர்வதேசக் கடப்பாடு இலங்கையின் மீது இருக்கின்றது. அதை நிறைவேற்றும் செயல்திட்டங்களில் இலங்கையின் தற்போதைய அரசு போதிய கரிசனை காட்டவில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எங்களது தரப்பு வெற்றி பெறுமேயானால், நிச்சயமாக இதில் கூடிய கரிசனையை நாங்கள் காண்பிப்போம். அதற்கான உத்தரவாதங்களைத் தமிழ் மக்களுக்கு நாங்கள் ஏற்கெனவே கொடுத்திருக்கிறோம்.

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. ஆக கூடுதல் மக்கள் வாக்களிக்கும் தேர்தல் இந்தியப் பாராளுமன்றத் தேர்தல். அந்த வகையில், யார் ஆட்சிக்கு வந்தார் என்பதை விடவும், பாரிய அசம்பாவிதங்கள் நிகழாமல் இந்திய ஜனநாயகம் வெற்றியடைந்திருக்கிறது என்பதைத்தான் இங்கே நான் சொல்லியாக வேண்டும்.

மூன்றாவது முறையாக மோடி ஆட்சிக்கு வந்திருக்கிறார் என்பது ஒரு புறம் இருந்தாலும், எதிர்க்கட்சிகள் பலமான நிலையில் இருக்கின்றன என்பது ஜனநாயகத்திற்கு உகந்த விஷயம். அந்த வகையில் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் போதிய ஆசனங்களையும் கைப்பற்றி மிகப்பெரிய வெற்றியைப் பெற்று இருக்கின்றன என்பது ஒரு மிகப்பெரிய சாதனை என்றே நாங்கள் கருதுகிறோம். ஆளுங்கட்சியினர், எதிர்க்கட்சியினர் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள் என்றார்.

# கூலிக்கு பிறகு ‘கைதி 2’





இயக்குநர் லோகேஷ் கனகராஜ் திரையுலகில் வந்த சில வருடங்களிலேயே கமல், விஜய் போன்ற உச்ச நட்சத்திரங்களை வைத்து படங்களை இயக்கினார். தற்போது நடிகர் ரஜினிகாந்த்தை வைத்து ‘கூலி’ என்ற படத்தை இயக்குகிறார்.

கடந்த 2019ஆம் ஆண்டில் நடிகர் கார்த்தியை வைத்து ‘கைதி’ எனும் படத்தை லோகேஷ் இயக்கிருந்தார். இப்படம் வெளிவந்த சமயத்தில் கைதி 2ஆம் பாகம் உருவாகும் என அறிவித்தனர்.

ஆனால், லோகேஷிற்கு தொடர்ந்து உச்ச நடிகர்கள் படம் இயக்குவதில் பிஸியாக இருந்ததால் ‘கைதி 2’ உருவாகுவதில் தாமதம் ஏற்பட்டது.

இப்போது லோகேஷ் இயக்கத்தில் உருவாகி வரும் கூலி படம் முடிவடைந்த பிறகு 2025ஆம் ஆண்டில் கைதி 2ஆம் பாகத்திற்கான படப்பிடிப்பு ஆரம்பிக்கும் என்கிறார்கள்.

# தனுஷின் ‘ராயனி’ ட்ரைலர் எப்போது?




சன் பிக்சர்ஸ் தயாரிப்பில், தனுஷ் நடித்த இயக்கிய ‘ராயன்’ திரைப்படம் வரும் 26ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்த படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து கிட்டத்தட்ட தொழில்நுட்ப பணியும் இறுதிகட்டத்தை நெருங்கி விட்டதுடன், இசை வெளியீட்டு விழா அண்மையில் பிரம்மாண்டமாக நடத்தப்பட்டது.

இந்த நிலையில், ‘ராயன்’ திரைப்படத்தின் ட்ரைலர் இன்று செவ்வாய்க்கிழமை (16) வெளியாகும் என்று சன் பிக்சர்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இப்படத்தில் தனுஷ், எஸ்.ஜே.சூர்யா, காளிதாஸ் ஜெயராம், சந்தீப் கிஷான், துஷாரா விஜயன், அபர்ணா பாலமுரளி, வரலட்சுமி சரத்குமார் ஆகியோர் நடித்துள்ளனர்.

ஓம் பிரகாஷ் ஒளிப்பதிவில், பிரசன்னா ஜிகே படத்தொகுப்பில் இந்த படம் உருவாகியுள்ளது.



# மகுடம் சூடிய ‘மகாராஜா’

நிதிலன் சுவாமிநாதன் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிப்பில் மகாராஜா கம்பேக் திரைப்படமாக விஜய் சேதுபதிக்கு அமைந்துள்ளது.

கடந்த ஜூன் 14ஆம் திகதி வெளியான முதல் நாளிலிருந்தே படத்திற்கு மக்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்ததுடன், படத்தின் வசூல் 100 கோடியை தாண்டியுள்ளது.

அந்த வெற்றியைத் தொடர்ந்து மகாராஜா திரைப்படம் கடந்த 12ஆம் திகதி நெட்பிளிக்ஸ் தளத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வெளியானது.

இந்த நிலையில், நெட்பிளிக்ஸ் தளத்தில் இந்த வார அதிகமாக பார்க்கப்பட்ட இந்திய திரைப்படங்களின் வார பட்டியலில் முதல் இடத்தை மகாராஜா பிடித்துள்ளது.





# 27 வருடங்களுக்கு பிறகு இணைந்த ஜோடி

‘சூரிய வம்சம்’ திரைப்படம் வெளியாகி சுமார் 27 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில், சரத்குமார் மற்றும் தேவயானி ஆகியோர் தற்போது மீண்டும் ஒரே படத்தில் இணைந்து நடிக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சித்தார்த் நடிக்க இருக்கும் 40ஆவது திரைப்படத்தை ஸ்ரீகணேஷ் இயக்க இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது இந்த படத்தில் சரத்குமார் மற்றும் தேவயானி இணைவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த படத்தின் நாயகியாக மீதா ரகுநாத் இணைகிறார். இவர் ஏற்கெனவே மணிகண்டன் நடித்த ‘குட் நைட்’ திரைப்படத்தில் நாயகியாக நடித்தவர்.

அத்துடன், இந்த படத்தில் இன்னொரு நாயகியாக சைத்ரா அச்சார் என்பவர் இணைந்துள்ளார். இவர் கன்னட திரையுலகின் பிரபல நடிகை என்பது குறிப்பிடத்தக்கது.



# சினிமாவை விட்டு விலக முடிவு?



பார்த்திபன் நடித்து இயக்கிய ‘டீன்ஸ்’ திரைப்படம் வெளியான நிலையில், ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

‘இந்தியன் 2’ என்ற பிரமாண்ட திரைப்படத்துடன் வெளியான இந்த படத்தின் வசூல் திருப்திகரமாக இருப்பதாக விநியோகிஸ்தர்கள் மற்றும் திரையரங்கு உரிமையாளர்கள் கூறி வருகின்றனர்.

இந்த நிலையில், இந்த படத்தின் வெற்றிக்கும், கிடைத்த விமர்சனங்கள் குறித்தும் பார்த்திபன் நெகிழ்ச்சியுடன் தனது சமூக வலைதளத்தில் செய்த பதிவு தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

‘டீன்ஸ்’ திரைப்படத்துக்கு உரிய மரியாதை குழந்தைகள் மற்றும் குடும்பங்களிடம் இருந்து கிடைக்கலைன்னா நான் மிகவும் நேசித்த உயிராய் சுவாசித்த சினிமாவை விட்டு விலகி கண்காணா இடத்துக்கு மறைஞ்சே போயிட முடிவெடுத்தேன். இப்ப நீங்க எல்லாரும் ஒரு முகமா குடுக்குற பாராட்டுல நான் ‘ஓ’ன்னு சந்தோஷத்தில அழுவுறது உங்களுக்கு கேக்க வாய்ப்பே இல்லே. இது போதாது இன்னும் ஆதரவு தந்து பலரும் பாக்க உதவி செஞ்சி என்னை சந்தோஷத்தில சாகடிங்க என்று பதிவிட்டுள்ளார்.

நேபாளம்

நேபாளத்தின் பிரதமராக

# பதவியேற்றார் கே.பி.சர்மா



நேபாளத்தின் புதிய பிரதமராக நேபாள கம்யூனிஸ்ட் கட்சி-ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் (சிபிஎன்-யுஎம்எல்) கட்சித் தலைவர் கே.பி.சர்மா ஓலி, திங்கட்கிழமை (15) பதவியேற்றுக் கொண்டார்.

அந்நாட்டின் பிரதமராக சர்மா ஓலி நான்காவது முறையாக பதவியேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேபாள பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (12) நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் முன்னாள் பிரதமர் புஷ்ப கமல் தாஹால் பிரசண்டா தோல்வியடைந்தார். இதையடுத்து, ஜனாதிபதியைச் சந்தித்த கே.பி.சர்மா ஓலி, தனது தலைமையில் ஆட்சி அமைக்க உரிமை கோரியிருந்தார்.

ஜனாதிபதி ராம் சந்திர பவுடலால், புதிய பிரதமராக சர்மா ஓலியை ஞாயிற்றுக்கிழமை (14) நியமித்த நிலையில், திங்கட்கிழமை (15) காலை அவர் பதவியேற்றுக் கொண்டார்.

சீனா

## பொருளாதாரத்தை சீர்திருத்த ஆலோசனை




சீனாவில் பொருளாதார செயல்பாடுகள் சற்று மந்தமாகியுள்ளதால், அடுத்த புதிய பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள அந்நாடு முடிவெடுத்துள்ளது.

இதற்கான அந்நாட்டு ஜனாதிபதி ஷி ஜின்பிங் தலைமையில் பொருளாதார ஆலோசனைக் கூட்டம் திங்கள்கிழமை (15) தொடங்கியது. இந்த கூட்டம் 4 நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

இதில் சீனாவில் ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுவின் அனைத்து 376 உறுப்பினர்களும் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்கால நவீனத் தொழில்நுட்பங்களைத் திறம்படப் பயன்படுத்தி நாட்டை வேகமாக முன்னேற்றும் வகையில் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. சீனாவின் இந்த நடவடிக்கையை உலகமே ஆவலுடன் எதிர்பார்க்கிறது. ஏனெனில், உலகின் பல்வேறு பொருள்களின் உற்பத்தி மையங்களில் ஒன்றாகத் திகழும் சீனாவில் மேற்கொள்ளப்படும் பொருளாதார சீர்திருத்தங்கள் அனைத்து நாடுகளிலும் எதிரொலிக்க வாய்ப்புள்ளது.

சீனா

## சிரிப்பது கட்டாயம்



“வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்” என்பது பழமொழி. சிரிப்பதால் கிடைக்கிற மருத்துவ பலன்களை கருத்தில்கொண்டு ஜப்பானின் ஒரு மாகாணத்தில் சிரிப்பதை கட்டாயப்படுத்த கடந்த வாரம் சட்டம் இயற்றப்பட்டுள்ளது

ஜப்பானின் யமகாட்டா ப்ரீஃபெக்சர் அரசு, மாகாணத்தில் உள்ள மக்கள் நாளொன்றுக்கு ஒருமுறை வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் என்பதை கட்டாயமாக்கி சட்டமியற்றியுள்ளது. பணியிடங்களில் சிரிப்பதற்கான சாதகமான சூழலை உருவாக்கவும் அலுவலக நிர்வாகங்களுக்குக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சுதந்திர ஜனநாயக கட்சி (எல்டிபி) இதனை சட்டமாக இயற்றியுள்ள நிலையில் இதற்கு எதிர்ப்பும் கிளம்பியுள்ளது.

சிரிப்பதும் சிரிக்காமல் இருப்பதும் மனிதர்களின் அடிப்படை உரிமை என எதிர்க்கட்சிகள் வாதிடுகின்றன. சிரிக்க இயலாதவர்களை சட்டம் கட்டாயப்படுத்த முடியாது என அவை தெரிவிக்கின்றன.

இந்த சட்டம் யமகாட்டா பல்கலைக்கழகத்தின் மருத்துவர்கள் குழுவால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. தொற்றுநோயியலுக்கான இதழில் 2020இல் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையில், ஆய்வாளர்கள் 40 வயதுக்கு அதிகமான 17,152 பேரிடம் தரவுகள் சேகரித்தனர்.

அந்த அறிக்கையில் இறப்புக்கான அனைத்துவிதமான காரணங்கள் மற்றும் இதய தொடர்புள்ள நோய்கள் ஏற்படுவது குறைவாக சிரிப்பவர்களுக்கு அதிகமாக பாதிப்பு ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டது.

சென்னை

ஜெயலலிதா சிகிச்சை வழக்கு:

# தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு





தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உடல்நலக்குறைவு காரணமாக சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து நீதிமன்ற கண்காணிப்பில் சி.பி.ஐ. விசாரணை கோரிய மனுவுக்குப் பதிலளிக்குமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உடல்நலக் குறைவு காரணமாக, கடந்த 2016ஆம் ஆண்டு செப்டெம்பர் 22ஆம் திகதி இரவு 10.25 மணிக்கு சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஜெயலலிதா, டிசெம்பர் 5ஆம் திகதி இரவு 11.30 மணிக்கு மரணமடைந்தாக அறிவிக்கப்பட்டார்.

இந்த காலகட்டத்தில் நடந்த சம்பவங்களில் நிறைய முரண்பாடுகள் இருப்பதால் உயர் நீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பில் சி.பி.ஐ. விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என கோரி திருச்செந்தூரைச் சேர்ந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக (அ.தி.மு.க.) உறுப்பினரும், வழக்கறிஞருமான ராம்குமார் ஆதித்தன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு பொறுப்பு தலைமை நீதிபதி ஆர்.மகாதேவன் மற்றும் நீதிபதி முகமது ஷபீக் அமர்வில் திங்கட்கிழமை (15) விசாரணைக்கு வந்த போது, ஜெயலலிதா மரணம் தொடர்பாக எழுந்துள்ள சந்தேகங்கள் குறித்து புலன் விசாரணை நடத்த வேண்டும் என ஆறுமுகசாமி ஆணையம் பரிந்துரைத்த போதும், அந்த அறிக்கை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜெயலலிதா மரணம் குறித்த அறிவிப்பு வெளியாகும் முன்பே அவரது உடலை எம்பாமிங் செய்வது தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இருமுறை மருத்துவமனை நிர்வாகம் ஜெயலலிதாவின் உடல் நிலை குறித்து தவறான தகவல் வெளியிட நேர்ந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதையடுத்து, இந்த மனுவுக்கு இரு வாரங்களில் பதிலளிக்கும்படி, தமிழக அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையைத் தள்ளி வைத்துள்ளனர்.



யூரோ:

# நான்காவது தடவையாக கிண்ணத்தை கைப்பற்றிய ஸ்பெய்ன்

ஜேர்மனியில் நடைபெற்று வந்த ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரில் ஸ்பெய்ன் சம்பியனானது.

திங்கட்கிழமை (15) நடைபெற்ற இங்கிலாந்துடனான இறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே ஸ்பெய்ன் நான்காவது தடவையாக சம்பியனானது.

ஸ்பெய்ன் சார்பாக நிக்கோ வில்லியம்ஸ், மிகேல் ஒயர்ஸபல் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, இங்கிலாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை கோல் பல்மர் பெற்றிருந்தார்.

அந்தவகையில், யூரோ கிண்ணத்தை அதிக தடவைகள் கைப்பற்றிய அணியாக தமது பெயரை ஸ்பெய்ன் பதிவு செய்தது. இதற்கு முன்னர் ஸ்பெய்னும், ஜேர்மனியும் தலா மூன்று தடவைகள் வென்றிருந்தன.



எல்.பி.எல்.

## ஜ..ப்னா கிங்ஸை தோற்கடித்த கொழும்பு ஸ்ரைக்கர்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்ற ஜஃப்னா கிங்ஸுடனான போட்டியில் கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கொழும்பு ஸ்ரைக்கர்ஸ்

ஜஃப்னா கிங்ஸ்: 109/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: விஜயகாந்த் வியாஸ்காந்த் ஆ.இ 25 (34), குசல் மென்டிஸ் 17 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: பந்துவீச்சு: ஷடாப் கான் 4/10 [4], பினுர பெர்ணாண்டோ 2/24 [4], திஸர பெரேரா 1/15 [2], மதீஷ பத்திரண 1/20 [4], இசித விஜேசுந்தர 1/11 [2], டுனித் வெல்லாகே 0/23 [4])

கொழும்பு ஸ்ரைக்கர்ஸ்: 112/1 (9.5 ஓவ.) (துடுப்பாட்டம்: ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் ஆ.இ 57 (33), முஹமட் வஸீம் ஆ.இ 35 (18), அஞ்சலோ பெரேரா 16 (08) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: ஷடாப் கான்

இந்நிலையில், மற்றைய போட்டியில் தம்புள்ள சிக்ஸர்ஸை கோல் மார்வெல்ஸ் வென்றது.

இதேவேளை, இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் தம்புள்ள சிக்ஸர்ஸை கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.




சிம்பாப்வேக்கெதிரான தொடரை

## 4–1 என கைப்பற்றிய இந்தியா

சிம்பாப்வேக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை 4-1 என இந்தியா கைப்பற்றியது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை சிம்பாப்வே வென்ற நிலையில், அடுத்த மூன்று போட்டிகளையும் வென்று தொடரைக் கைப்பற்றுவதை ஏற்கெனவே இந்தியா உறுதி செய்திருந்து.

இந்நிலையில், ஹராரேயில் ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்ற ஐந்தாவது போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே தொடரை 4-1 என இந்தியா கைப்பற்றியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வேயின் அணித்தலைவர் சிகண்டர் ராசா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, சஞ்சு சாம்சனின் 58 (45), ஷிவம் டுபேயின் 26 (12), யஷஸ்வி ஜைஸ்வாலின் 12 (05) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் பிளஸிங் முஸர்பனி 4-0-19-2, றிச்சர்ட் நகரவா 4-0-29-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 168 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே, முகேஷ் குமார் (4), வொஷிங்டன் சுந்தர், டுபே (2), அபிஷேக் ஷர்மா, துஷார் தேஷபந்தேயிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 18.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களையே சிம்பாப்வே பெற்று 42 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் பராஸ் அகரம் 27 (13) ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக டுபேயும், தொடரின் நாயகனாக சுந்தரும் தெரிவாகினர்.

## கோப்பா அமெரிக்கா: சம்பியனானது ஆர்ஜென்டீனா

தென்னமெரிக்க கால்பந்தாட்டச் சம்மேளன கோப்பா அமெரிக்கா தொடரில் ஆர்ஜென்டீனா சம்பியனானது.

திங்கட்கிழமை (15) நடைபெற்ற கொலம்பியாவுடனான இறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே ஆர்ஜென்டீனா சம்பியனானது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 16 ஜூலை 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.